பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a Newspaper in Sri Lanka.

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 12 செவ்வாய்க்கிழமை (27-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 69

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1518)

### யாழ்.மாநகர சுகாதார சேவை ஸ்தம்பிக்கும் அபாயம்!

## யாழ். மேயர்-தொழிற்சங்க பிரதிநிதிகள் சந்திப்பு
## நேற்றுவரை சுமுகநிலை ஏற்படவில்லை

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரனின் சேவைக்கு நிர்வாக ரீதியாகச் சிக்கல்களை ஏற்படுத்திவரும் நடவடிக்கைகளைக் கண்டித்து கறுப்புப்பட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கைகள் சுமுகமாகத் தீர்க்கப்படாத பட்சத்தில் எதிர்வரும் முதலாம் திகதிமுதல் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

இவ் அறிவித்தலை சுகாதார சேவையாளர் பிரதிநிதிளும், சுத்திகரிப்புத் தொழிலாளர் பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர். இவ் வேலை நிறுத்தப் போராட்டம் இடம் பெற்றால் யாழ். நகரத்தின் சுத்திகரிப்பு வேலைகள் முற்றாக ஸ்தம்பிதமடைவதுடன், சுகாதார சேவை, கிளினிக் சேவை, அம்புலன்ஸ் சேவை (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

இந்தியாவுக்கு இராஜிகவிஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினமிரவு நாடு திரும்பியுள்ளார்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்ற ஜனாதிபதி அங்கு முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து பேச்சுநடத்தியிருத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### ★ நோர்வேயின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ★

# அரசும் - புலிகளும் மார்ச் மாதம்
# 24ம் திகதிக்கு முன் கைச்சாத்திடுவர்!

### நோர்வேராஜதந்திரவட்டாரங்கள் நம்பிக்கை

(நமது அரசியல் நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக நோர்வே அரசு தயாரித்துள்ள "புரிந்துணர்வு ஒப்பந்தத்தை" மார்ச் மாத நடுப்பகுதியில் நோர்வே அரசு வெளியிடவுள்ளது.

இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை அரசின் சார்பில் முக்கிய அமைச்சர் ஒருவரும், விடுதலைப் புலிகளின் சார்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், ஐரோப்பிய நாடு ஒன்றில் வைத்து கைச்சாத்திடவுள்ளதாக நோர்வே இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மூன்று நாள் இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி சந்திரிகாவை பெரும்பாலும் அடுத்த மாத முதல் வாரத்தில் நோர்வேயின் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் சந்தித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

நோர்வே அரசின் சமாதானமுயற்சிகளை வரவேற்று வரும் இந்தியத் தலைவர்களின் முக்கிய ஆலோசனைகளுடனேயே ஜனாதிபதி நாடுதிரும்பியுள்ளார் என ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### புரிந்துணர்வு ஒப்பந்தம் முட்டுக்கட்டை நீங்கும்

இந்தியத் தலைவர்களின் முக்கிய ஆலோசனைகளை அடுத்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில முக்கிய மாறு (8-ம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சு ஏப்-19இல் இடம்பெறும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் ஏப்ரல் 19ம் திகதி அளவில்ஆரம்பமாகலாமென்று அரசாங்க உயர் அதிகாரி ஒருவரை ஆதாரம் காட்டி தகவல் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பேச்சு வார்த்தை நடத்துவதற்கான இடம் குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் ஐரோப்பிய நாடு ஒன்றிலேயே பேச்சுவார்த்தை ஆரம்பமாகலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள →2-ம் பக்கம் பார்க்க

## கோபுர வேலைகள் துரித கதியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ரெலிக்கொம் நிறுவனம் பண்ணையில் அமைத்துவரும்180மீற்றர் உயரமான தொலைத்தொடர்பு கோபுர வேலைகள் துரித கதியில் நடைபெற்றுவருகிறது.

இதுவரை 130மீற்றர் உயரம்வரை எழுப்பப்பட்டுள்ள கோபுரவேலைகள் இன்னமும் ஒன்றரை மாதத்திற்குள் முடிவடைந்துவிடும். கோபுரவேலைகள் முடிவுற்றதும் அதற்குரியமுக்கியமான கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு எடுத்துவரப்பட்ட பின்பே கோபுரவேலைகள் பூர்த்தியடையும் எனவும் ரெலிக்கொம் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

## மாணவன் சிவரூபனின் விவகாரம்
## மே. மா. க. பணிப்பாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வல்லை சிவகுரு வித்தியாலய மாணவன் சிவரூபனின் யப்பான் பயணம் தடைப்பட்டதற்கும், யாழ். மாவட்ட மேலதிகக்கல்விப்பணிமனைக்கும் எது விதமான தொடர்புமில்லையென யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

புலமைப் பரீட்சை தொடர்பான சகல விடயங்களும் மாவட்ட ரீதியில் மேலதிக கல்விப் பணிமனைகளே கையாள வேண்டும். ஆனால் சரியான முறையில் மேலதிக மாகாணக் கல்விப்பணிமனை → 8ஆம் பக்கம் பார்க்க

## போதைவஸ்து கடத்திய நபருக்கு மரணதண்டனை
### நீர்கொழும்பு உயர்நீதிமன்று வழங்கியது

(நீர்கொழும்பு)

ஹெய்ரோயின் போதைவஸ்தைக்கடத்திய நபர்ஒருவருக்குநீர்கொழும்புஉயர்நீதிமன்றம் மரணதண்டனை வழங்கிதீர்ப்பளித்துள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை இராஜதுரை (வயது50)என்பவருக்கே நீதிபதிஆனந்தலஷ்மன் அபஜரட்ணாவினால்நேற்றுஇத்தீர்ப்பு அளிக்கப்பட்டது.

1992ஆம்ஆண்டு673கிராம் ஹெய்ரோயினை இந்தியாவில்இருந்து இலங்கைக்கு கொண்டுவந்த போதுஇவர் கைதுசெய்யப்பட்டு கடந்த 9வருடங்களாக பிணைமறுக்கப்பட்டநிலையில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

நாளை...

வல்லை சிவகுரு வித்தி. மாணவனின் யப்பான் பயணத்தடை தொடர்பானவடமராட்சிகல்விப் பணிப்பாளரின் கடிதத்திற்கான விளக்கம் நாளைய வலம்புரியின் குருஷேத்திரத்தில் வெளியாகும். (ஆ-ர்)

## தென்மராட்சியில் மீள்குடியேற்றுவது பற்றி இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கைதடி உட்பட தென்மராட்சி பகுதிகளில் மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாகவும்' அப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பாகவும் இன்று காலை 10 மணிக்கு முக்கிய வெளிநாட்டு அரசசார்பற்ற திணைக்களங்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்ஸ்ரான்லிவீதியில்உள்ளவடக்குபுனர்வாழ்வு புனரமைப்பு தமிழ்விவகார அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலுக்கு, அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமைதாங்குவார்.

இக்கலந்துரையாடலில் கெயர் நிறுவனம் ஜிரிசற், போருட்,யு என் டி பி,சிறுவர் பாதுகாப்புநிதியம் ,எம் எஸ் → 8ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### ஸ்ரீ ராகவேந்த்ர ஜோதிடம்

இந்து 28வயது அழகிய B A பட்டதாரி மகளுக்கு உள்நாட்டில் தொழில் புரியும் நற்குணம் உடைய மணமகனை எதிர்பார்க்கின்றோம். மாலின் பட்டப்படிப்புக்குச் சமமானதாக இருப்பின் ஜாதகக் குறிப்புடன் தொடர்பு ஸ்ரீராகவேந்த்ர ஆலயம், நல்லூர்.

(கி/ 1486)

### விற்பனைக்கு

டீ. பிறிச் புதியது நீளம் 5½ அடி, அகலம் 2½ அடி உள்ளே சில்வர் தட்டினால் ஆனது விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: லிங்கம் தொலைத் தொடர்பு மானிப்பாய் வீதி, தாவடி. T. P. 2690

(2568)

### தவறி விட்டது

திருமதி. சரஸ்வதி சுந்தரலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல. 456752136 V) விசேட அடையாள அட்டையும் (இல. 090232781) அடங்கிய கைப்பை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'வலம்புரி'க் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (கி/ 1534)

### ஆலயவளவில் சைக்கிள் திருட்டு

(இணுவில்)

ஆலய வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி களவாடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று நல்லூர் ஆலய வளவில் நிறுத்தி விட்டு, அதிகாலை 5 மணிப் பூஜையில் கலந்து கொண்ட பக்தர் ஒருவரின் துவிச்சக்கர வண்டியே களவு போயுள்ளது. (உ-49)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

பெப் மாதம்25 - ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

**நல்லூர்**

| | |
|---|---|
| 130076 ஏ | 130076 பி |
| 165439 ஏ | 165439 பி |
| 176813 ஏ | 181453 ஏ |
| 181453 பி | 181481 ஏ |
| 181481 பி | 182749 ஏ |
| 183070 ஏ | 183070 பி |
| 183177 ஏ | 183182 ஏ |
| 183213 ஏ | 183213 பி |
| 183213 சி | 183216 ஏ |
| 183333 ஏ | 183333 பி |
| 183420 பி | 183520 ஏ |
| 183521 ஏ | 183521 பி |
| 184850 ஏ | 184853 ஏ |

**நெல்லிப்பழை**

| | |
|---|---|
| 181420 ஏ | 181420 பி |
| 181638 ஏ | 181638 பி |
| 182665 ஏ | 182666 ஏ |
| 182666 பி | 182728 ஏ |
| 182800 ஏ | 182800 பி |
| 182800 சி | 182800 டி |
| 182800 ஈ | 183065 ஏ |
| 183135 ஏ | 183238 ஏ |
| 183238 பி | 183305 ஏ |
| 183305 பி | 183314 ஏ |
| 183314 பி | 183314 சி |
| 183484 ஏ | 183484 பி |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 173108 ஏ | 173108 பி |
| 176528 ஏ | 179142 ஏ |
| 179142 பி | 179142 சி |
| 179186 ஏ | 179282 ஏ |
| 179282 பி | 179294 ஏ |
| 179294 பி | 179294 சி |
| 179378 ஏ | 179378 பி |
| 179379 ஏ | 179379 பி |
| 181452 ஏ | 182658 ஏ |
| 182685 ஏ | 182761 ஏ |
| 182761 பி | 182762 ஏ |
| 182796 ஏ | 182807 ஏ |
| 182807 பி | 182860 ஏ |
| 182864 ஏ | 183026 ஏ |
| 183026 பி | 183027 ஏ |
| 183028 ஏ | 183037 ஏ |
| 183037 பி | 183037 சி |
| 183037 டி | 183052 ஏ |
| 183109 ஏ | 183112 ஏ |
| 183181 ஏ | 183194 ஏ |
| 183194 பி | 183205 ஏ |
| 183205 பி | 183208 ஏ |
| 183212 ஏ | 183249 ஏ |
| 183258 ஏ | 183259 ஏ |
| 183266 ஏ | |

**உடுவில்**

| | |
|---|---|
| 179396 ஏ | 179396 பி |
| 179415 ஏ | 179415 பி |
| 179415 சி | 179430 ஏ |
| 179430 பி | 181598 ஏ |
| 182596 ஏ | 182620 ஏ |
| 182667 ஏ | 182677 ஏ |
| 182677 பி | 182696 ஏ |
| 182700 ஏ | 182844 ஏ |
| 183042 ஏ | 183042 பி |
| 183042 சி | 183083 ஏ |
| 183083 பி | 183131 ஏ |
| 183131 பி | 183131 சி |
| 183131 டி | 182155 ஏ |
| 183200 ஏ | 183200 பி |
| 183217 ஏ | 183217 பி |
| 183260 ஏ | 183260 பி |
| 183339 ஏ | 183348 ஏ |
| 183366 ஏ | 183368 ஏ |
| 183368 பி | 183368 சி |
| 183369 ஏ | 183419 ஏ |
| 183548 பி | 184828 ஏ |
| 184830 ஏ | 184851 பி |
| 184852 ஏ | 184888 ஏ |
| 185007 ஏ | 185007 பி |

**சங்கானை**

| | |
|---|---|
| 176833 ஏ | 178549 ஏ |
| 178789 ஏ | 178789 பி |
| 179279 ஏ | 181517 ஏ |
| 181547 ஏ | 181547 பி |
| 181547 சி | 181547 டி |
| 181576 ஏ | 181576 பி |
| 181614 ஏ | 181614 பி |
| 181614 சி | 181615 ஏ |
| 181656 ஏ | 181657 ஏ |
| 181657 பி | 182271 ஏ |
| 182271 பி | 182722 ஏ |
| 188722 பி | 182722 சி |
| 182735 ஏ | 182861 ஏ |
| 182861 பி | 182861 சி |
| 182861 டி | 182861 ஈ |
| 183046 ஏ | 183046 பி |
| 183180 ஏ | 183180 பி |
| 183197 ஏ | 183198 ஏ |
| 183202 ஏ | 183202 பி |
| 183210 ஏ | 183294 ஏ |
| 183294 பி | 183294 சி |
| 183312 ஏ | 183371 ஏ |
| 183373 ஏ | 183373 பி |
| 183388 ஏ | 183388 பி |
| 183388 சி | |

## முறைசாராக் கல்வி

[அரியாலை]

யா/ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை முறைசாராக் கல்விப் பிரிவினரால் சுருக்கெழுத்து, தட்டச்சு (ஆங்கிலம்) கணக்கியலும் கணக்குப் பதிவும் (ஆங்கிலம்) ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியுடையோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பாடசாலை அதிபருக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(உ-106)

## கட்டடவேலை பூர்த்தி

(இணுவில்)

ஈவினைக் கிராமத்தில், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் அனுசரணையுடன் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினால் அமைக்கப்பட்டு வந்த ஆரம்ப சுகாதார கட்டட அமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

(உ-49)

## வீதியால் செல்ல அச்சம்

(கல்வியங்காடு)

நல்லூர் பாணாங்குளம் ஒழுங்கையின் இருமருங்கும் புல் பூண்டுகள் வளர்ந்து காணப்படுவதனால் அப்பகுதியில் திருடர் பயம் அதிகரித்துள்ளது.

அத்துடன் அயலில் வசிப்பவர்கள் தமது வீட்டுக் கழிவுகளை வீதியில் போடுவதனால் ஒழுங்கை மிகவும் சுகாதாரச் சீர்கேடு நிறைந்ததாகவும் காணப்படுகிறது. (உ-54)

## களஞ்சியசாலை அமைப்பு

உடுவில் கமநல சேவை திணைக்களப் பகுதியில், பல இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வந்த உர களஞ்சியசாலை அமைப்பு சேவைகள் பூர்த்தி அமைத்துள்ளன.

அத்தோடு கமநல சேவைக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-49)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சேவையில் உயர்ந்த உத்தமரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்

உயர்திரு

**வே. பொ. பாலசிங்கம்**

அவர்கள்

யாழ். மாநகரசபையின் ஆணையாளராக இருந்து ஆற்றிய சேவையைப் பாராட்டுவதுடன் தற்பொழுது வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி ஏற்றமையையிட்டு எமதுசபை பெரும் மகிழ்ச்சியடைவதுடன் அவரது சேவை மேன்மேலும் சிறப்புறவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள்.**
வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

(கி-1528)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை தலைமையகம்

## பிரிவுத் தேர்தல் - 2001

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் கீழ் இயங்கும் 14 பிரிவுகளிலும், பளைப்பிரிவிலும் (பிரதேச செயலர் பிரிவு) 06. 05. 2001ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பிரிவுப் பொதுச் சபைக் கூட்டத்தில் அவ்வப் பிரிவுகளுக்கான பிரிவுத் தேர்தல்கள் நடைபெறும். 2001ஆம் ஆண்டுக்கான அங்கத்துவப் பணத்தை பிரிவுகளில் 16. 04. 2001க்கு முன்னதாகச் செலுத்தி. பிரிவினால் 17. 04 2001க்கு முன்னதாக யாழ் கிளையில் பணம் செலுத்திய துரித அங்கத்தவர்களும் ஏனைய ஆயுள் உறுப்பினருமே இத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையவராவர். ஆனால் போட்டியிடுபவர் தான் அங்கத்தவராகச் சேர்ந்த திகதியில் இருந்து நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் திகதிவரை 3 வருடங்கள் பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும். செயற் குழு உறுப்பினர் பதவிக்கான நியமனப் பத்திரங்கள் 13. 04. 2001 தொடக்கம் 23. 04. 2001 வரை அவ்வப் பிரிவுப் பணிமனைகளில் பெற்றுக் கொள்ளலாம். 24. 04 2001 மு.பகல் 9 00 மணி தொடக்கம் பிற்பகல் 4 00 மணிவரை நியமனப் பத்திரங்கள் பிரிவுக் காரியாலயங்களில் ஏற்றுக் கொள்ளப்படும். 25.04.2001 மு. பகல் 9 00 பி.ப 4.00 மணிவரை நியமனப் பத்திரங்களை வாபஸ் பெற்றுக் கொள்ளலாம். 06. 05. 2001 மு பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ள அவ்வப் பிரிவுப் பொதுச் சபைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மூவர் அடங்கிய தேர்தல் குழுவினரால் இரகசிய வாக்குச் சீட்டு மூலம் தேர்தல் நடத்தப்படும். பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம், நேரம், நிகழ்ச்சி நிரல் ஆகியன ஒவ்வொரு பிரிவுச் செயலாளரினாலும் பங்குபற்றத் தகுதிவாய்ந்த உறுப்பினர்களுக்கு 07 நாட்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,

**கௌரவ செயலாளர்.**

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2001. 02. 24

(கி-1527)

## அலங்கார உற்சவம்

(கல்வியங்காடு)

நல்லூர் ஸ்ரீபாலாம்பிகை ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-54)

### கலந்துரையாடல்

(கல்வியங்காடு)

யா/ பிரதேச செயலகத்திற்கு வேண்டிய புதிய கட்டடம் அமைப்பது மற்றும் அதற்கு வேண்டிய காணி கொள்வனவு செய்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று பி. ப. 3 00 மணிக்கு யா/வை. எம் சி.ஏ. கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (உ- 54)

## தந்தையும் மகளும் காயம்

(யாழ்ப்பாணம்)

தொங்க விடப்பட்டிருந்த பெற்றோமக்ஸ் வீழ்ந்து வெடித்ததில் தந்தையும் மகளும் தீக்காயங்களுக்கு உள்ளாகி மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சமரபாகு, இலந்தைக் காட்டில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பொ. யோகராசா [வயது-45] அவரது மகள் ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

(உ-104)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட, உயிர் இரசாயனவியற்துறையில் திருத்துதல் மற்றும் சேர்த்தல்/ மேம்படுத்தல் வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டிட நிர்மாணவேலைகளுக்காக இக்ராட் (I.TAD) நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் அல்லது பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் கேள்விப்பத்திரங்கள் பெறத்தகுதியுடையவராவர்.

கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திர வியலாளர் (குடிசார்) அவர்களிடமிருந்து 14. 03. 2001 வரை ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும், யாழ் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையை பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும், சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படக்கூடிய
வைப்புத்தொகை ரூபா 5000/=

மீளளிக்கப்படாத
வைப்புத் தொகை ரூபா 500/=

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 20.03.2001 காலை 10.00 மணிக்கு முன் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பராமரிப்புப் பகுதியில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர்கள் பரிசிலிக்க முடியும்.

**பதிவாளர்,**
யாழ் பல்கலைக்கழகம்:
தபால்பெட்டி இல.57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(கி-1526)

# வலயங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றம்

# 33 ஆசிரியர்களின் மேன்முறையீடுகள் ஆராய்வு

## புதிய தீர்மானங்களும் இயற்றப்பட்டன

[யாழ்ப்பாணம்]

அண்மையில் மேலதிக மாகாணப்பணிமனையினால் மேற்கொள்ளப்பட்ட வலயங்களுக்கிடையிலான இடமாற்றத் திட்டத்திற்கு அமைய யாழ். வலிகாம வலயங்களில் இருந்து தீவக வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற 45 ஆசிரியர்களில் இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்த 33 ஆசிரியர்களின் முறையீடு தொடர்பாக கடந்த ஞாயிறன்று ஆராயப்பட்டன.

நல்லூரில் உள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் சங்கத்தின் யாழ். கிளைச் செயலாளர் வ. கணேசமூர்த்தி தலைமையில் கூடிய இதற்கென தெரிவு செய்யப்பட்ட குழுவினர் பின்வரும் தீர்மானங்களை எடுத்தனர்.

இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள சகல ஆசிரியர்களும் உடனடியாக தீவுப் பகுதிப் பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

மாகாண மட்ட இடமாற்ற சபையின் விதி முறைக்கு மீறி செய்யப்பட்ட 6 வருட வெளி மாவட்ட சேவை, 4 வருட கஷ்டப்பிரதேச சேவை முடித்தவர்களதும், 6 வருடம் தொடர்ச்சியாக சேவையை பூர்த்தி செய்யாதவர்களதும் இடமாற்றம் பதில் ஆசிரியர்கள் வழங்கப்பட்டு இரத்துச் செய்தல் வேண்டும்.

சில ஆசிரியர்களுக்கு வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யப்பட்ட வைத்தியக் காரணங்களுக்காக அவர்களது இடமாற்றம் 3 அல்லது 6 மாதங்கள் பிற்போடப்படல் வேண்டும்.

தீவுப் பகுதியில் ஏற்பட்டுள்ள ஆசிரிய வெற்றிடத்தை நிரப்புவதற்காக நடைபெறவிருக்கும் ஆசிரிய நியமனங்களில் தீவுப் பகுதிக்கு முன்னுரிமை வழங்கும் வண்ணம் கல்வி அமைச்சர் வட-கிழக்கு மாகாண ஆளுநர் வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் கோருதல்.

இவ் வருடம் கல்விக் கல்லூரிகளில் இருந்து பயிற்சியை முடித்து வெளியேறும் சகல யாழ். மாவட்டத்தைச் சார்ந்த ஆசிரியர்களையும் தீவகப் பாடசாலைகளில் நியமிக்க கோருதல்.

ஒரே திகதியில் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்று பட்டதாரி ஆசிரிய நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட மெய்யியல், சமூகவியல், புள்ளி விபரவியல், புவியியல் போன்ற துறைகளைச் சார்ந்தவர்களை தீவக கல்வி வலயத்திற்கு ஆசிரியராக நியமனம் செய்யக்கோருதல்.

வேலணை / ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற பிரதேச செயலர் பிரிவில் 1995 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆசிரியர்களாக நியமனம் பெற்று தற்போது மற்றைய கல்வி வலயங்களில் இடமாற்றம் பெற்று ஆசிரியர்களாகக் கடமை புரிவோரை உடனடியாக நான்கு வருட சேவைக் காலம் பூர்த்தியாகும் வரை தீவகக் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் செய்யும்படி கோருதல்.

தீவகக் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை சம்பநதப்பட்ட கல்வி வலயங்கள் எமது சங்கத்தின் இடமாற்றங்களை பிரதிநிதிகளோடு கலந்தாலோசிக்காமல் பெயர் பட்டியலைத் தயாரித்தமையை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் ஏற்படாமல் கல்விப் பணிப்பாளர்கள் கவனித்தல் வேண்டும்.

எதிர்காலத்தில் ஆசிரிய சேவைக்குள் ஆசிரியர்களை உள்வாங்கி பதவி உயர்வுகள் வழங்கப்படும் போது அவர்களின்வெளிமாவட்டசேவைக்கும், கஷ்டப்பிரதேசசேவைக்கும் புள்ளிகள் வழங்கும் திட்டம் அமுல் படுத்தப்பட இருப்பதாக தாமாகவே முன்வந்து தீவுப்பகுதியில் சேவையாற்ற விரும்புவோர் சங்கத்தின் தலைமைப் பணிமனையுடனோ கிளைச் செயலாளர்களுடனோ தொடர்பு கொள்ள வேண்டும்.

## இரராசி பலன்

27 02 2001
(மாசி 15, செவ்வாய்)
சதுர்த்தி பி.ப 6 21 வரை
ரேவதி ந ப 12 31 வரை
இராகுகாலம் 3 59- 5 27
சுபநேரம் 11 26- 12 54
சித்தாமிர்தம், சதுர்த்தி விரதம்.

**மேடம்**
ஜனவசியம், சயனசுகம், கடன் பிரச்சினை, முயற்சி கைகூடும்.

**இடபம்**
வீண்தொல்லை கோபப்படுதல், அலைச்சல், காரியதாமதம்.

**மிதுனம்**
தொழில் மேன்மை, அரச ஆதரவு, தனவிரயம், காரிய நன்மை.

**கடகம்**
தொழில் சிந்தை, காரிய வெற்றி, சுபநிகழ்ச்சி, அதிகார நிலை.

**சிங்கம்**
வீண்செலவு, பிரயாணம், திட்டமிடல், கட்டுப்பாடு

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை, தடுமாற்றம், முயற்சி தங்கல், பிரயாண பயம்.

**துலாம்**
போசன சுகம், திடீர்பயணம், அபூர்வ சந்திப்பு, காரிய வெற்றி.

**விருச்சிகம்**
நோய் குணமடைதல், பகைவர் விலகுவர், புதிய முயற்சி, காரிய வெற்றி.

**தனுசு**
அற்பர் நேசம், காரிய சித்தி, மேன்மை, தாழ்ந்த மனம்.

**மகரம்**
கடிதத்தொடர்பு, ஆராய்ச்சி, நம்பிக்கைக் குறைவு முயற்சி மந்தம்.

**கும்பம்**
காரியம் கைகூடும், வாக்கு மேன்மை, நல்ல சம்பவம், அந்நியர் சந்திப்பு.

**மீனம்**
பொருள் விரயம் மாதர் நட்பு, முயற்சி தாமதம், மனக்கிலேசம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

### சர்வதேச நிறுவனம்

# மக்களுக்கு அன்பளிப்புச் செய்த பொருள் விநியோகத்தில் மோசடி

(கொழும்பு)

சர்வதேச ஜப்பானிய ஒற்றுமை நிறுவனத்தினால் குறைந்த வருமானங்கள் பெறும் மக்களுக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருட்களை அரச நிறுவனம் ஒன்று விற்பனை செய்துள்ள விடயம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பெருந்தோட்ட கிராமப்புறங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 500குடும்பங்களுக்கு யைக்கா அமைப்பு சென்ற வருடம் இந்த பொருட்களை வழங்கியிருந்தது

இத்திட்டம் வடக்கு-கிழக்கு மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பொருட்களில் கூரைத் தகடுகளின் விநியோகம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

இதில் 7 லட்சம் சீமெந்து கூரைத்தகடுகளும் 80 ஆயிரம் உலோகத் தகடுகளும் அடங்கியிருந்தன.

ஆனால் பெருந்தோட்டப் பகுதியில் 17 குடும்பங்களுக்கு மாத்திரமே கூரைத் தகடுகள் வழங்கப்பட்டன.

இது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனம் உரியவர்களிடம் விளக்கம் கோரியுள்ளது. [உ-5]

# இருபது ஆண்டுகளில் செவ்வாயில் மனிதன்

(கொழும்பு)

இன்னும் இருபது ஆண்டுகளில் செவ்வாய்க்கிரகத்தில் நடந்து செல்லக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாக எட்வின் அல்றின் தெரிவித்துள்ளார்.

இரண்டாவதாக சந்திரனில் காலடி எடுத்துவைத்தவரான எட்வின் அல்றின தற்பொழுது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(செ)

# மானிப்பாய் பி.சபையை தரம்உயர்த்த நடவடிக்கை

(சுண்டுக்குளி)

மானிப்பாய் பிரதேச சபையை விரைவில் நகரசபையாக தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கையை அமைச்சர் டக்ளஸ்தேவானந்த மேற்கொண்டு வருவதாக சம்பந்தப்பட்ட பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நல்லூர், நீர்வேலி பிரதேச சபைகளையும் விரைவில் நகரசபையாக்குவதற்கு வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் வே பொ. பாலசிங்கம் நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத் தக்கது. (உ-110)

### இந்திய- இலங்கை

# மீன்பிடி ஒப்பந்தம் ஏப்ரல் மாதம் அமுல்

(கொழும்பு)

இந்திய - இலங்கை மீன்பிடி ஒத்துழைப்பு உடன்படிக்கை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின்இந்திய விஜயத்தின் போது இது தொடர்பாக பல்வேறு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக நீரியல்வள மீன்பிடித் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த உடன்படிக்கையின் படி, இலங்கை மீனவர்கள் இந்தியக் கடலுக்குச் சென்று மீன்பிடிக்க இந்திய அரசு இணங்கிஇருப்பதாகத் தெரிய வருகிறது. (உ-9)

### அடிப்படை உரிமைகள்

# குறித்து பொதுமக்கள் அறிந்திருப்பது அவசியம்

(கொழும்பு)

பொதுமக்கள் தமது அடிப்படை உரிமைகள் பற்றி நன்கு அறிந்திருப்பது சமூக நீதியை ஏற்படுத்துவதற்கும், ஏனையவர்களின் உரிமைகளுக்குமதிப்பளிப்பதற்கும் ஊக்கிவிப்பாக இருக்குமென்று அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் சமாதான நீதிபதிகளுக்கான கருத்தரங்கில் அமைச்சர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றும் போது, வேலை வாய்ப்பு வழங்குவது, மற்றும் அரசியல்த்தலையீடு நீக்கப்பட்டிருப்பது நாட்டின் வருங்கால மேம்பாட்டிற்கும் சட்டவாக்கத்திற்கும் உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ-4)

### இலங்கை அரசிற்கெதிராக

# போரிடும் புலிகளை தோற்கடிக்க வேண்டிய உதவி வழங்கத் தயார்

[கொழும்பு]

இலங்கை அரசிற்குஎதிராக விடுதலைப் புலிகள் நடத்தி வரும் போரில் அவர்களைத் தோற்கடிக்க, இலங்கை அரசிற்கு உதவிகளை வழங்க இந்தியா தயாராகவுள்ளது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் அடல்பிஹாரிவாஜ்பாய் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிற்கு உறுதி அளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்உதவிகளை வழங்குவதாக கூறிய பிரதமர் வாஜ்பாய்; இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வைக் காணும் வகையில் பேச்சு வார்த்தைகளைஉடனடியாகஆரம்பிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேநேரம் இரு தரப்பு உறவுகளையும் பல்வேறு மட்டத்தில் தொடர்ந்தும் அதிகரிக்கும் விதத்தில் இருநாடுகளினதும் வெளி விவகார அமைச்சு அதிகாரிகளும் இராணுவஅதிகாரிகளும்தொடர்ச்சியாக சந்திக்கவும் இணங்கியுள்ளார்கள்.

புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற போதிலும், 1995ல் புலிகளுடன் நடைபெற்றபேச்சுக்கள் திடீரென முறிவடைந்ததனால், இவ் விடயத்தில் இலங்கையரசு மிகவும் எச்சரிக்கையாக இருப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார். (செ)

# பதவி உயர்வு

(ஈச்சமோட்டை)

யாழ் வட்டுக்கோட்டை காத்திகேய வித்தியாலயத்தின் அதிபர் பி.இரத்தினசபாபதி அதிபர் தரம் 11 பதவி உயர்வைப் பெற்றுள்ளார். [உ-59]

### பயிற்சி நெறிகள்

# ஆரம்பம்

(அரியாலை)

முயற்சி அகதிகள் புனர்வாழ்வுநிறுவனத்தின் திறன் விருத்தி மையத்தினால் இவ் ஆண்டுக்கான பயிற்சி நெறிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள கோரப்பட்டுள்ளன. [உ 109[

# சுகாதார விழிப்புணர்வு

வடமராட்சி சுகாதாரப பிரிவினர், இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பகுதிகளில் சுகாதார விழிப்பு சம்பந்தமான படக்காட்சிகளையும், கருத்தரங்குகளையும நடத்தி வருகின்றனர்.

இந்தத் தொடரில், கடந்த வாரம் சிங்கநகர் புலோலி கிழக்குப்பகுதிகளில்நெருப்புக் காய்ச்சல், மலேரியா போன்ற நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள இடம் பெற்றன. (உ-4)

### வலி. வடக்கு மக்கள்

# தமது பூர்வீக பிரதேசத்தில் மீண்டும் குடியேறல் அவசியம்

## ஜனாதிபதிக்கு அவசர மகஜர்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களிற்கு திரும்பிச் சென்று தமது இருப்பிடங்களில் வாழ்வதற்கான ஏற்பாடுகள் உடன் மேற் கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும்.

அகில இலங்கை தமிழ்காங்கிரஸ்கட்சியின் யாழ். மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி ஜனாதிபதிசந்திரிக்கா குமாரதுங்கவிற்கு அனுப்பிவைத்த மகஜரில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் மகஜரில் தெரிவிக்கையில்; தொடரும் யுத்தத்தினால் வலி வடக்கு உட்பட தென்மராட்சிப் பகுதிமக்கள் தம் வாழிடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்துவருகிறார்கள்.

வலி வடக்குப் பகுதியில் மட்டும் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டதுடன் 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

அடிக்கடி இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதேயன்றி குறையவில்லை.

இடம்பெயர்ந்தோரை தமது இடங்களுக்கு செல்லவிடாமல் தடுப்பது அடிப்படை மனித உரிமைமீறல் ஆகும். இதுவிடயத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வடக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் முறையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## அம்பலத்திற்கு வந்த திருட்டுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரண்டுவாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற திருட்டு ஒன்று அம்பலத்திற்கு வந்த சம்பவம் யாழ்ப்பாணப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் பிறவுண்வீதியில் மகாலிங்கம் என்பவருடைய வீட்டில் நடந்த இருவாரங்களிற்குமுன் திருட்டு இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் ரீ.வீ.டெக், வானொலிப்பெட்டி உட்பட 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டன

இப்பொருட்கள் கஸ்தூரியார் வீதியில்உள்ள நபரிடம் அண்மையில் விற்க முற்பட்ட வேளையிலேயே மேற்படி பொருட்கள் திருடப்பட்டதென்பது அம்பலத்திற்கு வந்தது.

பிரஸ்தாப திருட்டு ஆசாமி யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (சு-ப)

## ஜனநாயக நடைமுறைக்கு சுயாட்சி முக்கியம்

### கனேடிய பேராசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு சுயாட்சி முக்கியம் என கனடாவிலுள்ள ஒட்டாவா பல்கலைக்கழக மனித உரிமைத்துறைப் பேராசிரியர் ஏரல் நிந்தஸ் கூறியுள்ளார்.

சமஷ்டி, ஜன நாயகம் சிறுபான்மையினருக்குரிய கௌரவம், அரசியல் அமைப்பு மாற்றங்கள் என்ற நான்குமே வரலாற்றின் பாதைகளாக அமைந்துள்ளன.

பல்லின சமூகம் ஒன்றில் அமைதியை நிலை நாட்ட இது அவசியமானதாகும்.

கொழும்பு கலதாரிக்கோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்த கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (செ)

## வீதிகளில் செல்வோர் விதிகளை பேணல் அவசியம்

### பொலிஸ் அதிகாரி வேண்டுகோள்

(மந்திகை)

வீதிகளில் செல்வோர்வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிப்பது தன்மூலம் தேவையற்ற உயிரிழப்புக்கள் ஏற்படுவதனை தவிர்க்கக் கூடியதாக இருக்கும் என நெல்லியடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிபொதுமக்களிடம் உருக்கமான வேண்டுகோள் விடுத்துளளார்.

இதுவிடயம் தொடர்பாக துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் வருமாறு;

★ வீதியில் நடந்து செல்பவர்கள் எப்பொழுதும் வலதுபக்கமாக நடந்து செல்லுதல் தங்கள் பிள்ளைகளை வீதிகளில் விளையாட அனுமதிக்காதீர்கள்.

★ வீதிகளை கடக்கும் பாதசாரிகடவைகளை பயன்படுத்துங்கள். இல்லாத விடத்து முதலில் வீதியில் வலதுபக்கம் பார்த்துபின்னர் இடதுபக்கம் பார்த்து பின் மீண்டும் விரைவாக கடவுங்கள்.

★ நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தின் முன்னால் அல்லது பின்னால் வீதியை கடக்க முயலாதீர்கள்,

★ துவிச்சக்கரவண்டி பாவனையாளர்கள் தங்களது வண்டியின் பெல், பிறேக் என்பவற்றை அவதானித்து வண்டியை எப்போதும் சீர் நிலையில் வைத்திருங்கள்.

★ துவிச்சக்கர வண்டிகளில் செல்லும்போது வீதியில் இடதுபக்கமாக ஒருவர்பின் ஒருவராக செல்லுங்கள்.

★ மாணவர்கள் துவிச்சக்கர வண்டியில் செல்லும் போது சகமாணவர்களுடன் சமாந்தரமாக செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ சிறு வீதியிலிருந்து பிரதான வீதிக்கு வரும்போது தங்கள் வண்டியை நிறுத்தி பிரதானவீதியில் செல்லும் வாகனங்களுக்கு முன்னுரிமையளியுங்கள்,

★ இடது கை வலது பக்கம் திரும்பும் போதுமற்றைய வாகனங்களுக்கு இடையூறின்றி தவறாது சைகை காட்டுங்கள்.

★ நிறுத்தப்பட்ட வாகனத்தை கடக்கும் போது வாகன போக்குவரத்தை அவதானியுங்கள்.

★ துவிச்சக்கர வண்டியில்செல்லும்போது மற்றைய ஓட்டுநரை அல்லது வாகனத்தைப் பிடித்துக்கொண்டு செல்லாதீர்கள். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ அதேவேளை, வடமராட்சிப் பகுதியில் அடிக்கடி வீதி விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க- 23)

## மயங்கி வீழ்ந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் பணிபுரிந்துகொண்டிருந்தவேளை, திடீரென மயங்கிவீழ்ந்ததில் நாயன்மார்கட்டைச்சேர்ந்த பிரான்சிஸ் லின்டன் (வயது 56) என்பவர் மரணமடைந்துள்ளார்.

கோப்பாய் பகுதி வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்றிலேயே மேற்படி சம்பவம இடம்பெற்றுள்ளது. (உ-6)

## நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென இவ்வாண்டில் 13 கோடிரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடற்றொழில், வீடமைப்பு விவசாயம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றிற்கே இந்நிதி பயன்படுத்தப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## வருடாந்த உற்சவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்தசுவாமியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துதினங்கள் நடை பெறவுள்ளது. (உ-82)

## மெய்வல்லுநர் போட்டி

[ஊர்காவற்றுறை]

யா/ ஊர்காவற்றுறை தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இல்லமெய்வல்லுநர் தடகளப் போட்டி இன்றுமு. ப. 9மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க. சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமாகிய என். மதனராஜா பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம், தீவக கல்விவலய நிர்வாக அதிகாரி செ.மெற்றாஸ் மயில், ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி க. இரத்தினசிங்கம், ஊர்காவற்றுறைப் பிரதேச சபை உபதலைவர் நா. திருச்செல்வம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-75)

## மீனவர்களின் மதிய உணவை பொலித்தீன் பைகளில் எடுத்துச் செல்லப் பணிப்பு

(கொழும்பு)

யாழ். கடல்நீரேரிப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் தம்முடன் எடுத்துச்செல்லும் உணவுப் பொருட்களை பொலித்தீன் பைகளில் எடுத்துச் செல்ல வேண்டும் என படையினர் பணித்துள்ளனர்.

மீன்பிடித் தொழிலாளர்களால் எடுத்துச் செல்லப்படும் பகல் உணவுப் பொதிகள் மற்றும் சுற்றப்படும் பத்திரிகைகளை படையினர் எப்போதும் தீவிர பரிசோதனைகளுக்கு உட்படுத்திய பின்னரே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டு வருகின்ற போதிலும், தற்போது இப்புதிய நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## சமாதான நீதவான்களுக்கு அமைச்சர் எச்சரிக்கை

### லஞ்சம் பெறுகின்றனராம்

(சுண்டுக்குளி)

சமாதான நீதவான், திடீர் மரண விசாரணை அதிகாரி ஆகிய பதவிகள் கௌரவ பதவிகள். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கனவான்களை கௌரவப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பதவிகளான இவற்றை வகிப்போர் தற்போதுபதவிகளை மக்களிடம் லஞ்சம் வாங்குவதாக பொது மக்களிடம் இருந்து பல புகார்கள் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக நீதி அமைச்சர் பட்டிவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்விதம் தமது கௌரவப் பதவியை துஷ்பிரயோகம் செய்பவர்களை உடனடியாக பதவியில் இருந்து நீக்கப் போவதாகவும் சமாதான நீதவான்களையும் திடீர் மரண அதிகாரிகளையும் மக்களுக்கு சேவை செய்யக் கூடியதாக இணைக்கும் ஒரு முறையை தாம் அறிமுகப் படுத்தஎண்ணியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

### இங்கிலாந்து கிரிக்கெட் ரசிகர்கள்

## தங்குமிட வசதியின்றி நாடு திரும்பினர்

[கொழும்பு]

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட்போட்டித் தொடரை கண்டுகளிப்பதற்காக இங்கிலாந்திலிருந்து கொழும்பு வந்துள்ள ரசிகர்களுக்கு தங்குமிடவசதிகளின்றி தமது நாட்டிற்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

காலி, கண்டி ஹொட்டல்களில் உள்ள அறைகள் அனைத்தும் முன்கூட்டியே பதிவுசெய்யப்படடிருந்தமையும், ஏராளமான ரசிகர்கள் அங்கிருந்து வந்தமையும் இவ் இடப்பற்றாக்குறைக்கு காரணமாகும்.

காலியில் நடைபெற்ற இக் கிரிக்கெட்போட்டிக்கு ஒன்பதாயிரத்திற்கும் அதிகமான ரசிகர்கள் வருகை தந்திருந்தனர்.

இவர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர். (செ)

## அமைச்சு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டுமின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சூரிய கலம் மூலம் வீடுகளுககு மின் சாரம்வழங்குவதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரால் எடுக்கப்பட்ட முயற்சிக்கு பாதுகாப்பு பிரதி அமைச்சரிடம் சாதகமான பதில் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-12)

## கிளாலியில் மிதிவெடிகள் மீட்பு

(கொழும்பு)

கிளாலிப் பகுதியில் கடந்த இரு தினங்களில் மட்டும் சுமார் 437 மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளதாக விசேட தகவல் மையம் நேற்று தெரிவித்தது.

இதேவேளையில் மட்டுவில், கைதடிப் பகுதியில் 18 குண்டுகள் மீட்கப் பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-08)

## சமரசத்தை வலியுறுத்தி கொழும்பிற்கு ஒளிதீபம்

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தி இன்று வவுனியாவிலிருந்து சமாதான ஒளிதீபம் கொழும்பிற்குஎடுத்துச் செல்லப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டினை வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு பிரதியமைச்சர் பி. சுமதிபாலா மேற்கொண்டுள்ளார்.

இச் சமாதான ஒளிதீபம் இன்று காலை 9. மணிக்கு வவுனியா செயலகத்திலிருந்து இளைஞர்களால் வவுனியா எல்லைவரை கொண்டு செல்லப்பட்டு. அநுராதபுர இளைஞர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இச் சமாதான ஒளிதீபம் மரதன் ஓட்டமாக கொழும்பைச் சென்றடையும்.

எதிர் வரும் மார்ச்மாதம் 4ம் திகதி ஸ்ரீ. ல. சு. கட்சியின் 13வது வருடாந்த மகாநாடு நடைபெறும் இடத்திற்கு சமாதான ஒளிதீபம் கொண்டு செல்லப்படவுள்ளதாக பிரதியமைச்சர் சுமதிபால தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமையவே இச் சமாதான ஒளிதீபம் எடுத்துவரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## விவசாயக் கருத்தரங்கு

(இணுவில்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் இளைஞர்கள் மட்டத்தில் விவசாயம் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. (உ-49)

## இன்று ஒரு தகவல்

# ஒத்திவைத்தல் கூடாது

திட்டங்களை எதிர் காலத்திற்காய் தீட்டுகிறோம். தொடர்ந்து செய்ய வேண்டிய வேலையானபடியால்அப்படித் தான் திட்டமிடல் வேண்டும். ஆனால் ஒருவனுக்கு உதவி செய்வதை நாளை என்று ஒத்திப் போடுதல் கூடாது. நாம் நாளை உயிருடன் அல்லது சொன்ன இடத்தில் இருப்போம் என்பதற்கான ஆதாரம் என்ன?

சோழ நாட்டில் முருகன் என்ற வணிகன் ஒருவன் இருந்தான். மிகவும் நல்லவன். அரசனுக்கு விசுவாசமானவன். தனது நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை கப்பலில் ஏற்றிச் சென்று பிற நாடுகளில் விற்று விட்டு. அந்த நாடுகளில் உற்பத்தியாகும் பொருட்களை தனது நாட்டுக்கு ஏற்றி வந்து விற்பான். தான் செல்லும் நாடுகளில் உள்ள அதி சிறந்த பொருட்களை வாங்கி வந்து அரசனுக்கு பரிசளிப்பான். அத்துடன் அரசனின் நட்பு நாடுகளில் இருந்து ஆயுதங்களையும் குதிரைகளையும் ஏற்றி வந்து கொடுப்பான். அதனால் அரசன் அவனை நேசித்தான். அவனுக்கு வேண்டிய உதவிகளைச்செய்து கொடுத்தான்.

ஒருநாள் இரவு முருகனின் கப்பல் துறைமுகத்தை அடைந்த போது வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் புயல் வீசுமென அவன் நினைத்தான் எனவே அரசனிடம் சென்று அரசே இன்று வானம் கறுத்திருக்கிறது. மழையும் சூறாவளியும் வரும் போல் தெரிகிறது. கப்பலில் உணவுப் பொருட்களும் சேனையூரில் வாங்கிய ஏராளமான ஆயுதங்களும் உள்ளன. எனவே அவற்றை இறக்கிக் களஞ்சியத்தில் வைப்பது நல்லது என்றான்.

இரவு அரசியுடன் உல்லாசமாகப் பொழுதைக்களிக்கத் திட்டமிட்டிருந்த அரசனுக்கு வணிகனின் வரவு சினத்தைக் கொடுத்தது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது புயல் அடிக்கக் கூடிய அறிகுறிகள் தென்படவில்லை என்று எமது அரண்மனை சோதிடர் சொல்கிறார். நீங்கள் பயப்படாமல் போய்உறங்குங்கள். விடிந்த பின்பு பார்க்கலாம் என்று கூறிவிட்டுச் செல்ல முயற்சித்தார்.

'இல்லை மன்னா, நிலைமையைப் பார்த்தால் புயல் வரும் போல தெரிகிறது. நீங்கள் முதலமைச்சரிடம் சொன்னால்'. . என்றான் முருகன்.

அரசன் கோபத்துடன் வானத்தைக் கணக்கிட்டு வைத்திருக்கும் சோதிடரை விட நீர் புத்திசாலியோ என்றான்.

மன்னன் இருக்கும்நிலையில் எதைச்சொன்னாலும் புரிந்து கொள்ளமாட்டான் என்று நினைத்தவாறு வேதனையோடு சென்றான் முருகன்.

துறைமுகத்திற்கு வந்த முருகன் தனது தொழிலாளர்களைக்கொண்டு தனது பொருட்களை இறக்கி களஞ்சியத்தில் வைத்தான்.

இரவு இரண்டு மணியளவில் சிறிதாக வீசிய காற்று பலத்த சூறாவளியானது. கடும் காற்று வீசியதால் நங்கூரமிட்டிருந்த முருகனது கப்பல் திசைதெரியாமல் சென்று விட்டது.

கப்பலைத் தேடிய மாலுமிகள் ஐந்தாம் நாள் கப்பலைக் கண்டு பிடித்து துறைமுகத்திற்கு இழுத்து வந்தனர். கப்பலுள் இருந்த ஆயுதங்கள் எவையும் கப்பலுள் இருக்கவில்லை. முருகன் அதை அரசருக்கு அறிவித்தான்.

அரசர் கலங்கிப் போனார். அயல் நாட்டரசனின் தொல்லைகள் அதிகரித்துக்கொண்டிருக்கும் வேளையில் அவனின் கையில் ஆயுதங்கள் சிக்கினால் எப்படி இருக்கும் என்று நினைக்க அவருக்குப் பயமாக இருந்தது

மூன்று மாதங்களின் பின் ஒரு நாள் அயல் நாட்டரசன் நாட்டின் பெரும் பகுதியைக் கைப்பற்றி விட்டு அரண்மனையை நோக்கி வருவதாக தூதுவர்கள் வந்து சொன்னார்கள்.

அரசர் பட்டத்துராணியுடன் முருகனது வீட்டையடைந்து,

முருகா நீ சொன்னபடி அன்றே ஆயுதங்களை இறக்கியிருந்தால் இந்தக் கேடு ஏற்பட்டிருக்காது என்று கூறி வருந்தினார்.

முருகன் அரசனையும் அரசியையும் தனது கப்பலில் ஏற்றி மன்னனது நட்பு நாடான சேனையூருக்கு அனுப்பி வைத்தான்.

எவ்வளவு தான் அவசியமான வேலை இருந்தபோதும் அன்றன்று செய்யும் வேலைகளை ஒத்தி வைத்தல் கூடாது. எதற்கும் ஆயத்தமாக இருப்பவன் தனது அன்றாடக் கடமைகளை அன்றன்றே முடித்தவனாவான்.

கே. வி. குணசேகரம்

# வட பகுதி இளைஞர் யுவதிகளிடையே அபிவிருத்தி நோக்கியபயிற்சித் திட்டம்

## விரைவில் அமுலாகும் என அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தியை நோக்கிய பயிற்சித்திட்டமொன்றினை வடபகுதி இளைஞர் யுவதிகளிடையே கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட விருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெவிரித்துள்ளார்.

கடந்த சனியன்று இடம் பெற்ற தான் அலுவலகத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு கருத்துரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெவித்தார்.

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் இப் பயிற்சித்திட்டத்திற்கென 100 இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட விருப்பதுடன், அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் மூவாயிரம் முதல் மூவாயிரத்து ஐநூறு வரை கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டம் முதற் தடவையாக சாவகச்சேரி இளைஞர் யுவதிகளிடையே அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சமுர்த்தி நியமனங்களுக்கான வெற்றிடங்கள் பல இருப்பதாகவும் அவை விரைவில் நிரப்பப்பட நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-12)

# வெளிநாட்டவர் இருவர் இலங்கையில் படுகொலை

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதங்களில் வெளிநாட்டுப் பிரைஜைகள் இருவர் இலங்கையில கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பூங்கமப் பகுதியில்ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த ஒருவரும் லுணாவப் பகுதியில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவருமே கொலை செய்யப்பட்டவர்களாவர்.

லுணாவப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லைஎனமொறட்டுவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். [உ-5[

## பல்கலை ஊழியர் கவலை

(யாழ்ப்பாணம்)

யா/மாநகரசபை ஊழியர்களின் பிரச்சினை குறித்து யா/பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கவலை தெரிவிததுள்ளது.

அத்துடன், மாநகர மேயரும், மாநகர சபை உறுப்பினர்களும் இவ்விடயத்தில் தலையிட்டுஉரிய நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்த அறிக்கையில் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (உ- 4)

## சமாதானத்திற்கு ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தவும் பிரதேசங்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும் பூரண ஆதரவு வழங்கப்படுமென்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் உறுதியளித்துளளார். (உ-5)

## தேங்காய்கள் பழுது

(கோப்பாய்)

வலிகாமம் பகுதியில் குறைந்தவிலையில் விற்பனை செய்யப்படும் தேங்காய்களில கூடுதலானவை பழுதடைந்தவையாகவே காணப்படுவதாகத் தெரியவருகிறது. (உ-79)

## அதிருப்தி

(செம்பியன்பற்று)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்போது இடம் பெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளின் போது சில பாடசாலைகளில் இடம் பெறும் உடற்பயிற்சி நிகழ்வுகளின் பின்னணியில் பொப்பிசைப்பாடல்கள ஒலிக்கவிடப் படுவதுகுறித்தும் பலதரப்பில் இருந்தும்அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-42)

# நெடுந்தீவு மேற்கில் மதகு நிர்மாணம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு ஆற்றங்கரை ஓடை மதகினை நிர்மாணம செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவுப் பிரதேசத்திற்குள் அதிகளவு கடல் நீர் உட்புகுதல் மற்றும் நன்னீர் வெளியேறல் நடவடிக்கைகளை தவிர்த்து நெடுந்தீவு பிரதேசத்தின் வளத்தினைப் பேணும முகமாக பல்வேறு தரபபினரதும் கோரிக்கைகளுக்கிணங்க இம் மதகின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-82)

# காட்டுப் பகுதியில் கஞ்சா பொலிஸார் முற்றுகை

(கொழும்பு

மகாகல்வெவ பகுதியில் அடர்ந்த காட்டினுள் மேற்கொள்ளப்பட்ட பெரியளவிலான கஞ்சா செய்கையை சூரிய வெவ பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதன் போது 20 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ்நிறுவனத்தின் பொறுப்பதிகாரி ரி என். கம்ஷிம் தெரிவித்துள்ளார்.

கஞ்சாச் செடியைப் பயிரிட்டதாக சுருதப்படும இருசந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் நீதிமன்றத்திலும் ஆயர்படுத்தப்படவுள்ளனர். (உ-5)

# புகையிலைப் பயிரில் இலைச்சுருட்டல் நோய்

(இணுவில்)

இணுவில், உடுவில், மருதனாமடம் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள புகையிலைப் பயிர்களில் இலைச்சுருட்டல் நோய் பரவியதை அடுத்து மேற்படி பயிர்ச்செய்கையை விவசாயிகள் இடையில் கைவிட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

விவசாயிகள் சிலர் புகையிலை பயிரிட்ட நிலங்களில் மரவள்ளி மற்றும் வேறு உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடடுள்ளனர். (உ-49)

# மலசல கூடங்களை பேணுவதில் சிரமம் அதிபர்கள் சுட்டிக்காட்டு

(கோப்பாய்)

கோப்பாய்ப்பகுதியிலுள்ள பல பாடசாலைகளில் மலசல கூடங்களைப் பயன்படுத்துவதிலும் அவற்றைத் துப்புரவாக வைத்திருப்பதிலும் பாடசாலை அதிபர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கல்லூரிகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் சுகாதாரத் தொழிலாளர்கள் இன்மையும் சில பாடசாலைகளில் தண்ணீர் வசதி ஒழுங்காக கிடைக்காமையும் இக்சிரமங்கட்கு காரணமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வாரத்தில் ஒரு தடவையாவது பிரதேச சபையினர் தமது சுகாதார தொழிலாளிகளை சிறிய பாடசாலைகளில் துப்புரவுபணிக்கு ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கையை வலிகிழக்குப்பிரதேச சபையினர் மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கை சம்பந்தப்பட்ட அதிபர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பல சிரமங்களை பாடசாலைகள் தவிர்த்துக் கொள்ள முடியும்எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-79)

# இரத்தச் சோகையினால் 44 பேர் உயிரிழப்பு

(வவுனியா)

கடந்த மாதம் முல்லைத்தீவு, மல்லாவி, மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளில் இரத்தச்சோகை நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த 44 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, இம் மூன்று வைத்தியசாலைகளிலும் இரத்தச்சோகை நோய்ப் பாதிப்புக்குட்பட்ட 877 நோயாளிகள் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

இவர்கள் போஷாக்கின்மை, மற்றும் மலேரியா நோய் காரணமாகவே இரத்தச் சோகை நோய்ப்பாதிப்புக்கு உள்ளாகி உள்ளமை குறிப்பிடத் தக்கது (உ-4)

# யாழ்ப்பாணச் சிறுவர்களின் பிரச்சினைகளுக்கு தகுந்த தீர்வளிக்கயுனிசெவ் உறுதி

(சங்கானை)

யாழ்ப்பாணச் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தெரிவித்தால் அல்லது தெரியவரும் படசத்தில் அவற்றினைப் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க முடியுமென ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் யாழ் மாவட்டப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்

கடந்த சனியன்று இடம் பெற்ற சிறுவர் நிதிய பிரதிநிதிகள செய்தியாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டச் சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் சஞ்சிகை வெளியிட விருப்பதுடன் சிறுவர்தம் செயற்பாட்டு நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்து வீடியோ நாடா ஒன்று வெளியிடவிருப்பது குறித்தும்,

மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள உட்பட பல்வேறு வளர்ச்சிப் பணிகளிலும ஈடுபட்டுவருவது குறிதது இம் மாநாட்டின் போது தெளிவு படுத்தப் பட்டது. [உ-142]

## இன்று கொடியேற்றம்

[யாழ்ப்பாண.]

பொலிகண்டி வீரபத்திரர் ஆலய விருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது

வரும் 7, 8 ஆம திகதிகளில் முறையே தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெறும். (உ-104)

# கிரிக்கெட் சாதனை வீரர் றொனால்ட் காலமானார்

(கன்பரா)

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் உலகில் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரனாக கருதப்படும் அவுஸ்திரேலிய நாட்டவரான றொனால்ட் பிறட்மன் தனது 92 வது வயதில் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

1930 ஆம் ஆண்டு முதல் 1940 ஆம் ஆண்டுவரையிலான காலப் பகுதியில் தேசிய அணியின் சார்பாக விளையாடிய இவ் வீரர் 52 டெஸ்ட் போட்டியில் மாத்திரம் விளையாடி 6 ஆயிரத்து 996ஓட்டங்களை பெற்று சாதனை புரிந்துள்ளார்.

இவரது சராசரி ஓட்டங்களுக்கான 99.94ஐவேறு எந்த விளையாட்டு வீரரும் இதுவரை எட்டவோ அல்லது அதனை அண்மிக்கவோமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

# ஸ்கொட்லாந் கால்நடைகளில் புதிய வகை வைரஸ் தொற்றுநோய்

(லண்டன்)

பிரிட்டனில் கால்நடைகளைப் பீடித்திருந்த வைரஸ் தொற்று நோய்ஸ்கொட்லாந்திலுள்ள கால்நடைகளையும் பீடித்துள்ளது.

இதனையடுத்துக்கால்நடைகளை இடம் மாற்றுவதற்கு பிரிட்டன் அரசு தடைவிதித்துள்ளது.

இவ்வைரஸ் தொற்று இளம் கால்நடைகளின் வாய்கால் பாதம் ஆகிய இடங்களையே தாக்குகின்றது.

இவ் வைரஸ் காற்று, வாகனங்களின் ரயர்கள், மனிதர்களின் உடைகள் மூலமாக பரவுகின்றது.

இவ் வைரஸ் தொற்றுக்கு ஆளான கால்நடைகளில் பால் உற்பத்தி குறைவடைவதுடன், அவற்றின் உடல் எடையும் திடீரெனக் குறைவடையும்.

கால்நடைகளை இடமாற்றாதவாறு பிரிட்டனுக்கும், ஸ்கொட்லாந்திற்கும் இடையிலான 242 மைல் நீளமான எல்லைப்பகுதியில் இராணுவத்தினர், கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (செ)

# 112 வருடங்களின் பின் கிடைத்த தபாலட்டை

(லண்டன்)

சுமார் 112 ஆண்டுகளுக்கு முன் அனுப்பப்பட்ட தபால் அட்டை ஒன்று இந்த ஆண்டு உரிய இடத்திற்குப் போய் சேர்ந்துள்ளது.

1889 ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரிலிருந்து அனுப்பப்பட்ட தபால் அட்டை ஒன்றே ஸ்கொட்லாந்து நகரான அபர்டீனுக்கு 112 ஆண்டுகளுக்குப் பின்னர் பாதுகாப்பாக போய்ச் சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-9]

# தமிழ் மொழியில் திடீர் அக்கறை தேர்தலையொட்டிய நாடகமா?

[புதுடில்லி]

பிரதமர் வாஜ்பாய், தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோர் திடீரென்று தமிழ் மொழியில் அக்கறை காட்டுவது தமிழக மக்களை ஏமாற்றும் போலி நாடகமே.

இவ்வாறு அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலுக்காகவே அவர்கள் இவ்வாறு நாடகமாடுகின்றனர்.

தமிழ் உள்ளிட்ட பத்தொன்பது மொழிகளை மத்திய ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்தியதை ஏற்று, 1998 ஆம் ஆண்டு தேசிய அரசு நிர்வாகச் செயல் திட்டத்தில் சேர்த்துக்கொண்டார் பிரதமர் வாஜ்பாய்.

ஆனால் இதுபற்றி கடந்த மூன்றாண்டுகளாக இவர் எந்த நடவடிக்கையும் எடுக்காது இப்போது தேர்தலையொட்டி தமிழை ஆட்சி மொழியாக்குவது குறித்து ஆய்வு செய்ய பரிந்துரைத்திருக்கிறார்.

இது தமிழ் மக்களை ஏமாற்றும் செயலே என ஜெயலலிதா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். (செ)

# பிரிவினைவாத குழுவின் இராணுவ தலைவர் கைது

(மாட்ரிட்)

ஈ.டி.ஏ. என அழைக்கப்படும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பாக்பிரிவினை வாதக் குழுவின் இராணுவத் தலைவரை பிரெஞ்சுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

35 வயதானஇவர் அவ்லெட் என்ற பிரெஞ்சு நகர ஹோட்டல் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்பெயின் பாஸ்க் பகுதியில் கார்க்குண்டு வெடிப்பொன்றில் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாண்டில் ஈ.டி.ஏ நடத்திய இரண்டாவது தாக்குதல் இவையாகும். 1999 டிசம்பர் மாதத்திற்குப் பின்னர் இக்குழு 26 மனிதப் படுகொலைகளை புரிந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## செய்திப்பரல்

★ லண்டன் இராணுவத் தளத்தில் பயிற்சியின் போது ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக 14வயதான இராணுவப்பயிற்சியாளரின் கை துண்டிக்கப்பட்டது.

★ ரஷ்யாவிற்கு அதி முக்கியமான இரகசியங்களை எப்.பி.ஐ உளவு அதிகாரி றொபர்ட் ஹன்சன் விற்றிருப்பதாகக் கூறப்பட்டுளளது.

★ அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் செல்வாக்கு அவரின் மன்னிப்பு நடவடிக்கையை அடுத்து குறைந்துள்ளது.

★ பால்கன் தலைவர்களும், உயர் ஐரோப்பிய யூனியன் அதிகாரிகளும் கலவரங்களைக் கட்டுப்படுத்தும் வழிவகைபற்றி ஆராயஒன்றுகூடவுள்ளனர். (உ- 9)

# பிலிப்பைன்ஸ் கிளர்ச்சியாளர்கள் சரணடைய விருப்பம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் வடபகுதியில் சுதந்திர தாயகம் கோரிப் போராடி வரும் மகுறும் என்ற இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கத்தின் உறுப்பினர்கள் பலர் சரணடைய விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிளர்ச்சிக் குழுவில் இருந்து கடந்த வருடம் சரணடைந்த 22 உறுப்பினர்களுக்கு பிலிப்பைன்ஸ் அரசு மன்னிப்பு வழங்கியதையடுத்தே ஏனையோரும் சரணடைவதில் விருப்பம் தெரிவித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-9)

# கைதிகள் விடுதலைக்கு லஞ்சம் பெற்ற கிளின்ரனின் மைத்துனர்

(வாஷிங்டன்)

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் பதவி விலகும்போது சிறைக்கைதிகட்கு பொதுமன்னிப்பு வழங்கிய சம்பவத்தில் 4 லட்சம் டொலர் பணத்தை கிளின்ரனின் மைத்துனர் லஞ்சமாகப் பெற்றுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

தனது சகோதரர் ஹியூ றொதாம், கணவர் கிளின்டனால் மன்னிக்கப்பட்ட இருவரிடம் இருந்து 4 லட்சம் அமெரிக்க டொலர் பணத்தினை பெற்றது குறித்து ஹில்லாரி கிளின்டன் தான் மனவேதனை அடைந்துள்ளதாக வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

இதுபற்றி தான் முன்பே அறிந்திருக்கவில்லையெனவும் ஆனால் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது எனவும் ஹில்லாரி மேலும் கூறியுள்ளார். (உ-9)

# ஊடகவியலாளர்களுக்கு சிறைத் தண்டனை

(தெஹ்ரான்)

சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கிய கட்டுரைகளை எழுதிய ஊடகவியலாளர் மூவருக்கு ஈரானிய புரட்சிகர நீதிமன்றம் மூன்று மாதம் ஏழு நாட்கள் முதல் ஐந்தரை மாதம் வரையான சிறைத் தண்டனை விதித்துடன அவர்களுடன் தொடர்புடைய பத்திரிகை ஒன்றையும் தடை செய்துள்ளது.

சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு எதிராக தீவிரவாதக் கருத்துக்களைக் கொண்ட ஈரானிய புரட்சிகர நீதிமன்றம் கடந்த 10 மாதங்களாகத்தில் 30க்கும் மேற்பட்ட பத்திரிகைகளை தடை செய்தது டன் ஊடகவியலாளர் பலரையும் சிறையில் தள்ளியுள்ளது. (உ-5)

# சேதுசமுத்திர திட்டம் மீள் பரிசீலனை

(புதுடில்லி)

சேது சமுத்திரத் திட்டத்தை செயல் படுத்துவதை இந்திய மத்திய அரசாங்கம் மறுபரிசீலனை செய்து வருவதாக தெரியவருகிறது.

இத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் விடுதலைப் புலிகள் தமது கடத்தல் நடவடிக்கைகளுக்கும், இந்தியாவிற்கும்எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும்என எதிர்பார்த்தே இத்திட்டம் மறுபரிசீலனை செய்யப்படுகின்றது.

இதற்கு எதிர்ப்புதெரிவித்து திராவிடப்பேரவைப்பொதுச் செயலாளரும், தூத்துக்குடி பொறுப்புக்கழக அறங்காவலருமான நா நந்திவர்மன் இந்தியப் பாதுகாப்பு அமைச்சரிடம்மகஜர்ஒன்றைக் கையளித்துள்ளார்.

இத்திட்டம் நிறைவேற்றப்படும் என தமிழகத்தில்சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது பிரதமர் வாஜ்பாய் உறுதியளித்துள்ளார்.

இத்திட்டத்தின் ஆய்வுக்கு 480 கோடி மத்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ள போதும் 140 ஆண்டுகளுக்கு முன்பே இத்திட்டம் திட்டமிடப்பட்டது என்பதாலும் ஆழம் குறைந்த ஒருவழிப்பாதை என்பதாலும் இத் திட்டத்தினை உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்யுமாறு நந்திவர்மன் வலியுறுத்தியுள்ளார். [செ-3]

# இன்று ஆரம்பம்

(புதுடில்லி)

அவுஸ்திரேலிய அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று மும்பாயில் ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணிக்கு ''சௌரவ் கங்குலியும்'' அவுஸ்திரேலிய அணிக்கு ''ஸ்டீவேவும்'' தலைமை தாங்கவுள்ளனர் (உ)

# இஸ்ரேல் -பலஸ்தீன சமாதான 'பேச்சுக்கள் இழு பறி நிலையில்

(ஜெருசலேம்)

வன்முறைகள் முடிவடையும்வரை பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட மாட்டாதென இஸ்ரேலின் புதிய பிரதமர் ஏரியல் ஷரோன் அழுத்தம் திருத்தமாக அறிவித்துள்ளார்.

அதேவேளை, வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இஸ்ரேல் முற்றுகையை நீக்க வேண்டும் என்ற உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த அமெரிக்கா முயன்று வருவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னைய இஸ்ரேல் பிரதமர் எகுட்பராக் விட்ட இடத்தில் இருந்து தொடங்கப்படவேண்டும் என்று பலஸ்தீன தலைவர் ஜசிர் அரபாத் கேட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)

# கைநூல்

(யாழ்ப்பாணம்)

ஐக்கியநாடுகள்சிறுவர்நிதிய (யுனிசெப்) சிறுவர் உரிமைகள் ஒருதுரித நெறிகாட்டி என்ற கைநூல் ஒன்றினை வெளியிட்டுள்ளது. [உ]

# கும்பமேளா நிறைவு

(அலஹாபாத்)

சுமார் 10 கோடி மக்களிற்கு மேல் கங்காஸ்நானம் செய்து உலகின் மிகப்பெரிய ஜனத்திரள் கலந்துகொண்ட திருவிழா என்ற பெயரைத் தட்டிக் கொண்டமகா கும்பமேளா திருவிழா கடந்த வாரம் நிறைவு பெற்றது.

கடந்த ஜனவரிமாதம் 9 ஆம் திகதி ஆரம்பமான இக் கும்பமேளாவில் சுமார் 10 கோடிக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டுள்ளனர். (உ-9)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

வெவ்வேறு சம்பவங்களின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகளின் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகள் தரப்பினர் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி மன்னார் முருங்கன் கனிமோட்டைப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் மேஜர் அறிவு (ஜெயவீரசிங்கம் சூரியகாந்தன்) யாழ்மாவட்டம்.

கடந்த 12 ஆம் திகதி திருமலை மூதூர்ப்பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் கப்டன் தமிழரசன் (சாந்தலிங்கம் மோகனேஸ்வரன்) திருமலை மாவட்டம்.

கடந்த 24 ஆம் திகதி முல்லைக் கடற் பரப்பில் தவறுதலாக ஏற்பட்ட விபத்தில் வீரவேங்கை திருநெஞ்சன் (அருளானந்தம் சூசைதாசன்)யாழ் மாவட்டம் ஆகியோர் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். (உ-4)

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு
குறள்

# வலம்புரி

## சுவாமியின் வியாதி

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சு நடத்துவதைத் தடுக்கும் வகையில் இந்தியப்பிரதமர்வாஜ்பாய் ஆலோசனை வழங்க வேண்டுமென இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி வேண்டுகோள் விடுத்துள்ளதுடன்,

இலங்கை அரசு நோர்வேயின் சமாதான முயற்சியைக் கைவிட்டு புலிகளுக்கெதிராகப் போராடி அதன் தலைவர் வே. பிரபாகரனைக் கைதுசெய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

சுவாமியின் இக்கோரிக்கையை எண்ணிப் பார்க்கும் போது ஒரு கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது.

மனநோய் வைத்திய சாலையில் கடமையாற்றிய டாக்டர் ஒருவர் தான் சிகிச்சையளித்த மூன்று மன நோயாளிகளுக்கு வியாதி மாறிவிட்டதா என அறிய விரும்பினார். அதற்காக அவர் ஓர் தந்திரத்தைக் கையாண்டார். மூன்று கதிரைகளை அவர்களிடம் கொடுத்து இது உங்களுக்குத் தரப்பட்ட சைக்கிள் நீங்கள் மூவரும் ஓட்லாமென்றார். உடனே கதிரையிலிருந்த இருவர் தமது கால்களை சுற்றத் தொடங்கினர். ஒருவர் மட்டும் பேசாமல் இருந்தார். டாக்டருக்கு மிக்க மகிழ்ச்சி, ஒருவருக்காவது மனநோய் மாறிவிட்டதே என்ற திருப்தியில் அந்த நபருக்குக் கிட்டவாகச் சென்று நீர் மட்டும் ஏன் சைக்கிள் ஓடவில்லை என்று கேட்டார். அதற்கு அவன் உரத்த குரலில் ''டாக்டரே இப்போது என்னுடைய சைக்கிள் இறக்கத்தில் செல்கிறது என்றான்'' அதைக்கேட்ட டாக்டர் சொக்கிப் போனார்.

இதே போன்றுதான் விடுதலைப் புலிகளின்விடயத்திலும் மூவர் உளர். அதில் சைக்கிள் ஓடிய இருவரென சிஹல உறுமயவையும், ஜே. வி. பியையும் கருதினால், சுப்ரமணிய சுவாமி இறக்கத்தில் ஓடியவராக இருப்பார்.

இத்தகையவர்களின் பேச்சும் செயலும் சிரிப்பிற்கும், ஏளனத்திற்கும் உரியவையேயொழிய அவை எந்த வகையிலும் ஆக்கத்தைத் தரப்போவதில்லை.

# ஆயுர்வேத வைத்தியத்தில் ஆபத்துக்களில்லை

## "பத்தியத்தால்" பாதிப்பு ஏற்படுமென்பது தவறு

ஏ. எல். ராகவன்
மருத்துவ மாணவன்
இலங்கா சித்த, ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்

### மருத்துவ விளக்கம்

சித்த, ஆயுர்வேத, ஹோமியோபதி வைத்தியர்களிடம் மருந்தெடுக்கச் செல்ல பலருக்கு தயக்கம் ஏற்படுவதுண்டு, காரணம் அதைச் சாப்பிடாதே, இதைச்சாப்பிடாதே, அதைக் குறையுங்கள் இதைக்குறையுங்கள் என்று சொல்லி நோகடித்து விடுவார்கள் என்ற நினைப்பு அச்சம் மக்கள் மத்தியில் அதிகமாக உள்ளது, பத்தியம் தவறினால் பல நோய்கள் வந்துவிடும் என்ற தவறான கருத்து மக்களிடையில் நிலவுகிறது, இதனால் பத்தியம் என்றால் என்ன என்று விளக்க வேண்டியது அவசியமாகின்றது.

#### உணவுக்கட்டுப்பாடு

பத்தியம் பல வகைகளாகக் கூட வகுக்கப் பட்டிருக்கின்றது. ஆயுர்வேதத்தில் மட்டுமல்ல அலோபதியிலும் கூட (நவீனமருத்துவம்) உணவுக் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. எனவே சகல மருத்துவமுறைகளிலும் ஏதோ ஒரு வகையில் பத்தியம் அனுட்டிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது,

சர்க்கரை வியாதி(Diabetes) உடையவர்கள் இனிப்பு. கொழுப்பு பொருட்களைச் சாப்பிடக்கூடாது என்பதும், இரத்தக்கொதிப்பு உடையவர்கள் உப்பு, கருவாடு, ஊறுகாய் போன்றவற்றை நீக்கவேண்டும் என்பதும் பொதுப்படையானது.

#### ஏற்றஉணவும், பழக்கமும்

பத்தியம் என்பது உடல் நல்ல நிலையில் இருக்கும் போது நோய் வராமல் தடுக்கவும், நோயுள்ளபோது நோயை நீக்குவதற்கும், நோய்க்கான மருந்துகளின் செயல்களைப் பாதிக்காமல் சிறப்பாக ஊக்குவிப்பதற்கும் உதவுகின்ற உணவு மற்றும் பழக்கவழக்கங்களையும் குறிக்கும்.

அபத்தியம் என்பதுதான் நீக்கப்படவேண்டிய உணவுகள், மற்றும் பழக்கவழக்கங்களைக் குறிக்கும். உண்மையில் மக்கள் பத்தியம் என்றவுடன் நினைப்பது ஏதோ நீக்கவேண்டியவற்றை கூறுகிறோம் என்றுதான். ஆனால் அப்படியல்ல அதன் அடிப்படையே தவறு.

சிகரட் பிடிக்கக்கூடாது, புகையிலைபாவிக்கக்கூடாது, மதுபானம் ஆகாது என்பதெல்லாம் ஆரோக்கிய வாழ்வின் வழியாகும் அது தடை அல்ல. மருந்து சாப்பிடும் போது அகத்திக்கீரை, தக்காளி, நல்லெண்ணெய், மீன், முட்டை, பால் ஆகியவற்றை பொதுவாக நீக்க வேண்டும் என்று சொல்வதானது எல்லா நோய்க்கும் பொருந்தாது.

#### எள்ளும் கொள்ளும்

பழமொழி ஒன்று ஞாபகம் வருகிறது, ''இளைத்தவன் எள்ளைத்தின்பான் கொழுத்தவன் கொள்ளைத் தின்பான்'' என்றும் குறிப்பிடப்படுகிறது. அதாவது எடை குறைந்தவர்கள் எள்ளுச் சேர்ந்த மருந்துகளை பதார்த்தங்களை உதாரணமாக நல்லெண்ணெய், எள்ளுருண்டை ஆகியவற்றை மருந்தாகப் பயன்படுத்தலாம். எனவே நல்லெண்ணெய் நீக்கவேண்டும் என்பது பொதுவானதல்ல. அது போலவே அகத்திக்கீரை குடற்பூச்சிகளுக்கு மருந்தென்பதும் குடற்பூச்சிகளுக்கு மருந்து கொடுக்கும் போது அணைமருந்தாகவும் பயன்படுகிறது.

கொள்ளு ஆனது குருதியிலுள்ள கொழுப்பைக் கரைக்கும்/ குறைக்கும் என்பது ஆராய்ச்சியால் உறுதிசெய்யப்பட்ட உண்மை ஆகும். சிறுநீர்கற்களுக்கு தக்காளி காரணமாக இருப்பதாலும், Cystein கட்டிகளுக்கு மீன் போன்ற அசைவ உணவுகள் காரணமாக இருப்பதாலும் தவிர்க்கச்சொல்லப்படுகிறது.

#### ஒவ்வாமை

தோல் நோயில் குறிப்பாக Allergi ஒவ்வாமையால் ஏற்படும் கரப்பான் நோய்க்கு மீன், கருவாடு, கத்தரிக்காய் தவிற்கும் படி கூறப்படுகிறது. மேற்கூறிய பொருள்கள் பெரும் பாலானவர்களின் நோயை அதிகப்படுத்துவதால் தவிர்க்கும் படி சொல்லப்படுகிறது. ஆனால் இதுவே எல்லாருக்கும் ஒவ்வாத பொருளாக கருதமுடியாது. ஒவ்வொரு தனி மனிதனும் எது ஒத்துக் கொள்ளும், அல்லது ஒத்துவராது என்பதை உணர்ந்து செயற்படுவதே நல்லது.

#### அறிவியல் பூர்வமானது

சித்த ஆயுள் வேதத்தைப் பொறுத்தவரையில் உணவில் பயன் படுகின்றபல பொருள்கள் மருந்தாகவும் சொல்லப்படும் தன்மை பெற்று இருப்பதால் உணவிலேகடைப்பிடிக்கச்சொல்கின்ற விதிமுறைகள் மருந்துக்கான எதிர்விளைவுகள் என வருவதாக கருதப்படுகிறது.

சிலமருந்துகளைக் கொடுத்தவுடன் குறிப்பிட்டவகை உணவைக் கொடுக்க வேண்டும் அல்லது ஒரு மருந்தைக் குறிப்பிட்ட உணவுக்குப் பின் கொடுக்க வேண்டும் என்று ஆயுர்வேத மருத்துவ ஆதார நூல்களில் செல்வது அறிவியல் பூர்வமானது இதே போன்று ஒரு நோய்க்கான பிரதான மருந்துகள் அதனுடன் சேர்த்துக் கொடுக்கும் துணை மருந்துகள். அவற்றுக்கான அனுபானங்கள் எனப் பல பகுப்பாய்வுகள் செய்து உள்ளமை குறிப்பிடத்தக்கது

#### பாதிப்பு இல்லை

எனவே, ஆயுர்வேத மருத்துவத்தில் அதிக கட்டுப்பாடு, இருக்கிறது. அதனால் மருந்து சாப்பிடுவது கடினம் என்று நினைப்பது ஒரு தவறான நம்பிக்கையே ஆகும் நோய்க்கு சிகிச்சை செய்யாததால் அல்லது நோயின் தீவிரத்தால் அதன் தன்மையால் பாதிப்புகள் ஏற்படலாமே ஒழியப் பத்தியத்தால் பாதிப்புக்கள் ஏற்படும் என்ற நினைப்பை நீக்கி விடுங்கள். நீடித்த ஆயுளைப்பெறஆயுர்வேத மருந்துகளை நல்ல, சிறந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் படியும்அவரின் மேற்பார்வையுடனும் நடைமுறைப்படுத்துங்கள். நன்மை கிடைக்கும்.

## விபூதித் திருநாள் மகிமை

நாளை திருநீற்று (விபூதித்) திருநாள் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் தவக்காலத் திருநாளாகும். அன்றையதினம் பூசை, திருப்பலியின்போது, குருவானவர் குருத்தோலை எரித்த சாம்பலை (திருநீற்றை) மக்களின் நெற்றியில் பூசி, மனிதா! நீ 'மண்ணினாலாகி இருக்கின்றாய். திரும்பவும் மண்ணுக்கு இரையாவாய்' எனக்கூறும் நிகழ்வு எங்களுக்குச் சாவை நினைவூட்டுகின்றது. மணிமுடிதரித்த மன்னரும் ஒருநாள் பிடிசாம்பல் ஆவார்.

ஆதித்தாய், தகப்பன் ஆகிய ஆதாம், ஏவாள் கட்டிக் கொண்ட பாவத்தின் வழியாக மானிடவர்க்சம் பாவத்தில் மூழ்கியது. தம் திருத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரன் இயேசுக்கிறீஸ்து நாதர் சிலுவையில் அறையுண்டு மரித்ததின்மூலம், எமக்கு விமோசனம் கிடைத்தது. ஆகவே, இந்தத் தவக்கால ஆரம்ப தினமான விபூதித் திருநாளில், நமது பாவங்களுக்குப் பரிகாரமாக யேசுநாதர் பட்டபாடுகளையும், மரணத்தையும் நினைவுகூர்ந்து மன்னிப்பு கோருவோம்.

வி. பிரான்சீஸ்

## வணிக கல்வி பாடநூல் அனுப்பிவைக்கப்படவில்லை

(செம்பியன்பற்று)

அண்மையில் கல்வியமைச்சினால்யாழ்.மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இலவசப் பாட நூல்களில் தரம் 10, 11 மாணவர்களுக்கான ''வணிகக் கல்வியும் கணக்கீடும்'' பாடநூல் ஒன்றுகூட இடம்பெறவில்லை.

இது தவிர இப்பாடத்திற்கான ஆசிரியர் கைநூலும் அனுப்பி வைக்கப்படாமையினால் வர்த்தக பாடம் போதிக்கும் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கும் ஆளாவதனை அவதானிக்க முடிகிறது.

இது மட்டுமன்றி தரம் 3, 8, 11 ஆகியவற்றுக்கான பாடநூல்கள மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுப்பி வைக்கப்பட்டிருப்பதனால், அவற்றை மாணவர்களிடையே பங்கீடு செய்வதில் அதிபர்கள் இடைஞ்சல்களை எதிர்நோக்குவதாகவும்,

சில பாடசாலைகள் இலவச பாட நூல்களை சுழற்சி முறையில மாணவர் மத்தியில் விநியோகித்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

(உ-42)

## வசதிகள் குறைந்த நிலையில் வடமராட்சி கிழக்கு பாடசாலைகள்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்குகோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் இடம் பெயராத பாடசாலைகளில் வாய்ப்பு வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதாக பாடசாலை நிர்வாகத்தினரால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அம்பன் அ. மி. த. க பாடசாலை, குடத்தனை அ. த. க. பாடசாலை, மணற்காடு றோ. க. பாடசாலை ஆகியவற்றிலேயே மேற்குறித்த குறைபாடுகள் நிலவுகின்றன.

இப் பாடசாலைகளில் தட்டச்சு இயந்திர வசதியோ அன்றி றோணியோ இயந்திர வசதியோஇன்மையால் மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள்களை ஆசிரியர்கள் தமது கையாலேயே எழுதிக் கொடுக்க வேண்டியுள்ளது.

அத்துடன், பாடசாலையின் அலுவல்கள் நிமித்தம் வேறு இடங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களை, வெளியில் பணம் கொடுத்து தட்டச்சில் பொறிக்கும் நிலையும்காணப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் பல பாடசாலைகளிலும் கணனி வசதி ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் பல்வேறு சலுகை சேவைகளையும் அனுபவித்து வரும் இவ்வேளையில் தமது சிறிய தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத வளத்தட்டுப்பாட்டு நிலை குறித்து தொடர்புடைய கல்விச் சமூகத்தினர் மிகுந்த அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

(உ-42)

## இன்று விளையாட்டு போட்டி

[யாழ்ப்பாணம்]

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு யா. சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மத்திஸ்ஜோலன்ட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யா. பல்கலைக் கழக கணிதத்துறை விரிவுரையாளர் எஸ் ஸ்ரீ சற்குணராஜா கலந்து கொள்வார்.

(உ-6)

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

[கி-1517]

# இராணுவம் வெற்றியீட்டுவதற்கு ஆதரவாக நாமிருக்க வேண்டும்

## உப சபாநாயகர் உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் போரிடும் திறனைக் கட்டுப்படுத்தி, புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டு வெற்றிகளைப் பெறும்இராணுவத்தினருக்கு நாம் ஆதரவாகச் செயற்பட வேண்டும்.

பொல்காவலையில் இடம் பெற்ற பஸ் சேவை ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய பிரதிச் சபாநாயகர் மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: 1983 ஆம் ஆண்டிலிருந்து தீவிரமடைந்துவரும் யுத்தத்தினால்நாம் பல இழப்புக்களைச் சந்தித்தோம் எனினும் இவ் இழப்புகளுக்கு மத்தியிலும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியடைய வேண்டுமானால் அரசியல் பேதங்களை மறந்து நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டுமென்று தெரிவித்தார். (இ)

## 17 இளைஞர்கள் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பில் இடம் பெற்ற தேடுதலின் போது நேற்று முன்தினம் இரவு 17 இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்த 17 இளைஞர்களும் மாலைதீவுக்குச் சென்றுவிட்டு நீர் கொழும்பில் உள்ள பிரபல்யமான விடுதியொன்றில் தங்கியிருந்த வேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 15பேர் தமிழ் இளைஞர்கள் இருவர் முஸ்லிம்கள் கைதான 17 பேரில் விசாரணையின்பின் 10 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 7 இளைஞர்களுக்கு 7நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (வ)

## காலியில் ஆர்ப்பாட்டம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யுமாறு கோரி பிரித்தானிய அரசை வலியுறுத்தும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக்காலை காலி கோட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இவ்வார்ப்பாட்டத்தில் காலி மாநகர முதல்வர் லயனல் பிறேமசிறி, மற்றும் மதத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-4)

## இராணுவ கோப்ரலின் முன்மாதிரியான செயல்!

(யாழ்ப்பாணம்)

ஒரு இலட்சத்து ஆயிரத்து எழுநூறு ரூபாவை வீதியிலே கண்டெடுத்து அதனை உரியவரிடம் கையளித்த முன்மாதிரியான செயலை 12 ஆவது விஜயபாகு படையணியைச் சேர்ந்த இராணுவ லான்ஸ் கோப்ரல் ரத்நாயக்க புரிந்துள்ளார்.

கடந்த 24ந் திகதி சாவகச்சேரிப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மேற்படி இராணுவக் கோப்ரல் வீதியிலே கண்டெடுத்த பணப்பை தொடர்பாக தனது மேலதிகாரிக்கு தெரியப்படுத்தி அவரின் மூலம் உரியவரிடம் அதனை ஒப்படைத்துள்ளார்.

இப்பணத்தின் உரிமையாளரான சாவகச்சேரி நகர சபையின் செயலாளர் எம். எஸ். சரவணபவனிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பணப்பை இராணுவ சார்ஜன்ட் தஸநாயக்காவினால் கையளிக்கப்பட்டதென பலாலி பாதுகாப்புத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## யாழ்.மேயர்...

அனைத்தும் பாதிப்படையும் நிலைமை இவ்வாறிருக்க நேற்றைய தினம் யாழ். மேயர் ரவிராஜ் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரனைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போது, புதியஆணையாளரின் பண்பற்றவார்த்தைகள் அடங்கிய கடிதங்கள்க-டந்த 10வருடங்களாகத் தான்ஆற்றியசேவைக்கு அவர்திட்டமிட்டு ஏற்படுத்திவரும் களங்கம். சுகாதாரசேவை பற்றிஏதும் தெரியாத நிலையில் சுகாதார ஊழியர்களுக்கு வழங்கப்படும்பொருத்தமற்ற இடமாற்றம் சுயீனவிடுப்பில் இருந்த ஊழியரை வேலை நீக்கியமைபோன்ற பல்வேறு விடயங்களை டாக்டர் தெய்வேந்திரன் முன்வைத்து தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

இச் சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமகாராசா மாநகர சபைஉறுப்பினர் சேவியர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளைநேற்று மாலை 6 மணியளவில் யாழ்மேயருக்கும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கு மிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை இரண்டுமணி நேரம் நீடித்த போதிலும் சுமுகமான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

இந் நிலையில் இன்றும் பேச்சுவார்த்தைகள் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

## இன்று திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச களஞ்சியங்களைப் பன்முகப்படுத்தி அமைக்கும் திட்டத்தின்கீழ் ஊர்காவற்றுறையில் அமைக்கப்பட்டுள்ள அரச களஞ்சியத்தின் திறப்புவிழா இன்று நடைபெறவுள்ளது.

இக் களஞ்சியங்கள் இயங்கத் தொடங்கிய பின் தீவுப் பகுதிக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இங்கு களஞ்சியப்படுத்தப்படுமென யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

இதே வேளை இக் களஞ்சியத்தில் 500 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை வைத்திருக்க முடியும்.

## அரசும்...

தல்களை மேற்கொள்ளலாம் என்றும் இதன் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான முட்டுக்கட்டை நிலை நீங்கும் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

விடுதலைப் புலிகளினால் மூன்றாவது தடவையாக அறிவிக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்தம் முடிவடைவதற்கு முன்னதாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இருசாராரும் ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் மூன்றாவது யுத்த நிறுத்த நீடிப்பு அடுத்கமாதம் 24 ம் திகதி நள்ளிரவுடன் முடிவடையவுள்ளதால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருவரும் கைச்சாத்திடுவதன் மூலம் மேலும் ஒரு யுத்த நிறுத்த நீடிப்புக்கான அறிவித்தலை விடுதலைப் புலிகள் விடுக்க வாய்ப்புண்டு இல்லையேல் இந்த யுத்த நிறுத்தமே இறுதியான அறிவிப்பாக இருக்கலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## அரசு-புலிகள்...

விருக்கும் உயர்மட்டக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களை ஒரு சில தினங்களில் நியமிக்கப் போவதாக பேச்சுக்களில் கலந்து கொள்ளவிருக்கும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-5)

நவீன வீடியோ மிக்சிங் கமறா மூலம் படப்பிடிப்புகள் செய்யவும் உள்புற ,வெளிப்புற படப்பிடிப்புகளுக்கும்

**மேகாஸ் வீடியோ ஓடியோ அன் மிக்சிங் ஸ்ரூடியோ**

23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(கி/1516)

## கண்ணி வெடிகள் செயலிழப்பு

(கொழுமபு)

கடந்த 23 ஆம் 24 ஆம் திகதிகளில் இளாலிப் பகுதியில் இருந்து 437 கண்ணிவெடிகள் படையினரால் கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

மேற்படி தினங்களில் கைதடி மட்டுவில் பகுதிகளில் இருந்து வெடிகருவிகள் பலவும்கைப்பற்றப்பட்டு.பின்னர் அவை செயலிழக்கச் செய்யப் பட்டதாகமேலும்தெரிவிக்கப் பட்டுள்ளது. உ-9)

## ஆறு தமிழர் கைது

அட்டனில் நடைபெற்ற இ. தொ. காங்கிரஸின் சத்தியாக்கிரகத்தைப் பார்வையிட்டுவிட்டு கொழும்பு சென்ற ஆறு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆறு தமிழ் இளைஞர்களும் இத்துள்கல என்ற இடத்திலேயே வைத்து பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ம)

## இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரித்தானியஅரசுவிடுதலை புலிகளை தடைசெய்யவேண்டுமென்றுகோரி இன்றுகொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தஆர்ப்பாட்டம் கொழும்பு காலிமுகத்திடலிருந்து ஆரம்பமாகி கொள்ளுப்பிட்டியில் உள்ளபிரித்தானிய தூதரகத்தை சென்றடையவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தினை பிரதிஅமைச்சர் மேவின்சில்வா ஏற்பாடுசெய்துள்ளார்.

ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் பிரித்தானிய தூதுவரிடம் மகஜர்ஒன்றும்கை அளிக்கப்படவுள்ளது. (வ)

## தென்மராட்சி...

எவ்.சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும்ரான் தலைவர் மற்றும் யாழ் அரசஅதிபர், திணைக்களத் தலைவர்கள், எம்பிக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## மாணவன்...

யிடம் பொறுப்புக்களைக் கையளிக்க 'ததனாலேயேஇத்தகைய தவறுகளும், மோசடிகளும் இடம்பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்த கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை இது தொடர்பாக இடம் பெற்ற தவறுகளை கல்விச் சமூகம் கண்டறிய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். (ந)

## யுத்தத்தை சித்தரிக்கும் சிங்கள திரைப்படத்திற்கு தடை உத்தரவு

(கொழும்பு)

பிரபல சிங்கள திரைப்பட இயக்குனர் பிறசல்ல பிடானகேயினால் தயாரிக்கப்பட்ட ''பிறஹந்லபடகல'' எனும் திரைபடத்தை திரையிடுவதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இத்திரைப்படத்தின் கதை கருவூலம்இலங்கையில் நடைக் பெறுகின்ற யுத்தம் சம்பந்தமானது. இதில் வரும் காட்சியமைப்புக்கள் யுத்தத்தால் ஏற்படும் பாதிப்பை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

போரில் உயிரிழந்த இராணுவச் சிப்பாயின் சடலம் எடுக்கப்பட்டதாக தெரிவித்து, உறவினர்களுக்கு சடலம் அனுப்பப்படுகிறது. ஆனால் பிரேதப் பெட்டிக்குள் சடலத்துக்கு பதிலாக கல்லும் வாழைக் குட்டியுமே காணப்படுவதாக காட்சியமைப்பு சித்தரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

**பிற்போடப் பட்டுள்ளது**

லாலாசோப் ஸ்தாபனத்தார்

நாளை (28/02/2001) புதன் கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 25/03/2001 ஞாயிற்றுக் கிழமைக்கு பிற்போடப் பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

லாலா சோப் ஸ்தாபனத்தார்

[கி/1532]

**நன்றி நவில்கின்றோம்**

யா/ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்திற்கான பெயர்ப் பலகையை பிரபல வர்த்தகரான

கௌரி அழகுமாட உரிமையாளர்

**திரு. எஸ். இராமேஸ்வரன்**

அவர்கள்

அன்பளிப்பாக உதவியமையை இட்டு அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அவர் பணி சிறப்புற என்றும் அவருக்கு இறையருள் வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(யா/ ஆனை. பாலசுப்பிரமணிய வித்தியாலயம்)

(கி/ 1531)

**ஸ்ரீ செல்வா**

(யாழ்ப்பாணம்)

பிரசாந் - ஷாலினி நடித்த

**பிரியாத வரம் வேண்டும்**

இன்று மட்டும்

10-30, 2-30 ப. நே)

(புதிய வெளியீடு)

(கி/1428)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது;